# அன்னையின் புதியப் புரட்சி

முன்னுரை

அன்னையின் புதிய புரட்சி

*"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*பின்னருள்ள தருமங்கள் யாவும்*
*பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்*
*அன்னயாவினும் புண்ணியம் கோடி*
*ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"*

என்ற பாரதியின் வரிகளுக்கு உயிர்கொடுக்கும் முயற்சியும்,

மாணவர்களால் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி கொடையுமே அன்னையின் புதிய புரட்சி. கிராமிய பின்னணியில் அமைந்துள்ள இக்கல்வி நிறுவனத்தின் பெரும்பாண்மையான மாணவர்கள் மிகவும் பின்தங்கிய பொருளாதார நிலையில் உள்ளவர்கள். கல்லூரியின் அறக்கட்டளை சார்பாக எண்ணற்றோர்க்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டும் கூட கல்வி தேவையை சுமந்து நிற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கிறது.

இன்றையச் சூழலில் இலவசம் என்பது ஓர் முழுமையை முடக்கும் விதமாக அமைந்து விடக்கூடாது என்று நோக்கில் அறிவை வளர்க்கும் கல்வியை எல்லோருக்கும் கிடைக்க வகை செய்யும் மாபெரும் திட்டம்தான் அன்னையின் புதிய புரட்சி திட்டத்தின் இலக்கு.

இந்நிலையை உணர்ந்ததன் அடிப்படையிலேயே, மாணவர்கள் இணைந்து அன்னையின் புதியப் புரட்சி திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர்.

# செயல்படும் முறை




அன்னை புதிய புரட்சி ஓர் நெறிபடுத்தப்பட்ட கட்டமைப்புக்குள் இயங்கி வருகிறது. சுழற்சிமுறையில் அன்னை கல்வி குழும நிறுவனங்களின் முதல்வர்களில் ஒருவர் இப்புரட்சி திட்டத்திற்கு தலைவராக நியமிக்கப்படுவார்.

தலைவர்க்கு உறுதுணையாய் செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஆய்வுக்குழு உறுப்பினர்கள் அன்னையின் புதிய புரட்சிக்கு தங்கள் சேவையைச் செய்து வருகின்றனர்.

## செயற்குழு

செயற்குழுவில் அன்னை புதிய புரட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர், மூன்று ஆர்வமுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பேராசிரியாகள் மற்றும் இரண்டு மாணவ உறுப்பினர்கள் இடம்பெறுவர். மூன்று ஆசிரியர்களை, செயலாளர் மற்றும் பொருளாளர்களை ஆசிரியர்கள் பணிமுப்பு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். அதைப் போன்றே இரண்டு மாணவ உறுப்பினர்களை பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பர்.

செயற்குழு, பொதுக்குழு முன்மொழிந்த மாணவர்களை அவர்களின் மேல்நிலை கல்வி மதிப்பெண், குடும்பச் சூழல், பொருளாதார நிலை ஆகியவற்றை ஆய்வுக்குழு மூலம் அறிந்து அவர்களின் தேவைக்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு செய்ய தலைவருக்கு பரிந்துரை அளிப்பர்.

## பொதுக்குழு

அனைத்து வகுப்புகளிலும், ஓர் ஆண் மற்றும் ஒருபெண் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் பொது குழு அமைப்பாக செயல்படுவார்கள். அவ்வுறுப்பினர்கள் தாங்கள் பரிந்துரைக்கும் நபர்களை, அவர்களின் பொருளாதார நிலைக்கேற்ப தரவரிசைசெய்து, செயற்குழுவின் ஒப்புதலுக்கு அனுப்புவர்.

மேலும் பொதுக்குழு உறுப்பினர்கள் தங்கள் வகுப்புகளில் உள்ள நிதி அளிக்கக்கூடிய விருப்பமுள்ள மாணவர்கள் கொடுக்கும் காசுகளை அன்றாடம் பெற்று, பொருளாளரிடம் ஒப்படைக்கும் உன்னதப் பணியைமேற்கொள்வர்.

## ஆய்வுக்குழு

ஆய்வுக்குழுவில் துறைத்தலைவரோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பேராசிரியரோ உறுப்பினராக செயல்படுவர். அவர்களை அல்லாது, ஓர் பொதுக்குழு உறுப்பினரும், ஓர் செயற்குழு உறுப்பினரும் ஆய்வுக்குழுவில் இடம் பெறுவர். இவ்வாய்வுக் குழு அன்னை புதிய புரட்சியின் பயனாளி ஒவ்வொருவருக்கும் தனித்தனியே அமைக்கப்படும். அவர்கள் நிதி வேண்டி விண்ணப்பம் செய்யக்கூடிய மாணவர்களின் இல்லத்துக்கு சென்று அவர்களின் உண்மை தன்மையறிந்து அறிக்கைஒன்றை செயற்குழுவிற்கு வழங்குவர். அதன் அடிப்படையில் செயற்குழுவின் பரிந்துரை தலைவர்க்கு அனுப்பப்படும்.

## பதவிக்காலம்

தலைவர் பதவி மூன்று ஆண்டுகாலமும் மற்ற அனைத்து குழுவும் ஓராண்டும் செயல்படும்.

### அன்னையில் மாணவர் சேர்க்கை

i) கல்லூரியில் முதலாமாண்டு சேர்க்கப்பட்ட மாணவர்களில் பொருளதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்களை அடையாளம் கண்டு, ஆசிரியர் குழு அமைத்து அதன் மூலம் சூழ்நிலையை அறிந்து வரச்செய்து, அதன் அடிப்படையில் அன்னையின் புதிய புரட்சியின் செயற்குழு கூட்டத்தில் முன்மொழியப்பட்டு, அக்குழுவின் பரிந்துரையை ஏற்று, மாணவர்களின் தகுதிக்கு ஏற்ப கல்வி உதவித்தொகை வழங்கிட முடிவு எடுக்கப்படும்.

### தலைமை ஆசிரியர்களின் பங்கு

i) இயற்கை சீர்கேடுகளால் அவ்வப்போது பாதிக்கப்படும் கிராமங்களில் உள்ள ஏழை மாணவர்களுக்கு பள்ளி கல்வி உதவி மற்றும் கல்லூரி கல்வி வழங்கிட புதிய புரட்சியில் பயனாளிகளாக சேர்த்து கொள்ளுதல்.

ii) தேர்ந்தெடுத்து தத்து எடுக்கப்பட்ட கிராமங்களில் உள்ள அரசு மேனிலைப் பள்ளிகளில் பயின்று வரும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நன்றாக படிக்க கூடிய மாணவர்களை தலைமை ஆசிரியரின் பரிந்துரையின் படி இரு மாணவர்களை புதிய புரட்சி திட்டத்தில் பயனாளிகளாக இணைத்தல்.

## நிதிதிரட்டும் கொள்கை

### மாணவர்களின் பங்களிப்பு:

அன்னை கல்வி குழுமத்தில் பயிலும் மாணவர்கள் அனைவரும் தங்கள் பொருளாதார நிலைக்கேற்ப தினமும் காசுகள் வழங்கியும் தங்கள் தேவைகளை குறைத்து சேமிப்பை அதிகரித்தும் புதிய புரட்சிக்கு நிதி வழங்கி வருகிறார்கள்.

### மாண்புடையோர் பங்களிப்பு:

தங்கள் பிள்ளைகளின் கல்வி நிலை அறிய வரும் பெற்றோர்கள் பேராசிரியர்களின் அன்பிலும், அரவணைப்பிலும் வளரும் மாணவர்களை கண்டு, அன்னையின் புதிய புரட்சிக்காக ஏழை மாணவர்களின் கல்வி நலனை பாதுகாக்கும் பொருட்டு ஆண்டு தோறும் விலைமதிபில்லா பெருந்தொகையை வழங்கி வருகின்றனர்.

### அன்னை கல்விக் குழும நிர்வாகத்தின் பங்கு

அன்னை கல்வி குழுமம் மாணவர்களின் கல்விக்காக சலுகைகள் பல செய்தும், ஏழை மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்த காரணத்தினால் அன்னை கல்வி நிர்வாகம் புதிய புரட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான கல்விக் கட்டணத்தில் 25% சதவிதம் அன்னையின் புதிய புரட்சிக்கு வழங்கிவருகிறது.

### நிதியைக் கையாளும் முறை

மாணவர்கள் திரட்டிய நிதிக்கு உடனடியாக இரசீது வழங்கப்படும். அந்நிதி அதற்கென இருக்கக்கூடிய வங்கிக் கணக்கில் உடனடியாக செலுத்தப்படும். எந்த ஒரு மாணவனுக்கும் காசோலையாக மட்டுமே நிதி வழங்கப்படும்.

மேலும் இதற்கு நிதி வழங்கும் பொதுமக்கள் நிதியும் வங்கியில் செலுத்தப்படும்.

### பயனாளிகள்

புதிய பயனாளிகளைச் சேர்ப்பதற்கோ, இருக்கும் பயனாளியை நீக்குவதற்கோ செயற்குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு.

## புதிய புரட்சியின் செயல்பாட்டு நோக்கம்

- வறுமையின் பிடியில் கல்வியைத் தொலைக்கும் மாணவர்களுக்கான கலங்கரை விளக்கு
- ஏற்றத்தாழ்வில்லா கல்வி சமுதாயம் படைத்தல்
- பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களின் கல்வி மேம்பாடு
- ஈகை பண்பை மாணவர்களிடத்தில் விதைத்தல்
- சமூக அக்கறை கொண்ட சிந்தனையை மாணவர்களிடம் வளர்த்தல்
- ஒன்றுபட்ட சமுதாயத்தை உருவாக்குதல்
- இயற்கை சீர்கேடுகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவி

# Annai New Revolution Beneficiary List

**Batch - 2008 - 2011**

| S.No | Name | Department |
|---|---|---|
| 1 | Ranjitha. K | B.Com |
| 2 | Ranjani. C | B.Com |
| 3 | Bhuvaneswari. M | BCA |
| 4 | Radhika. M | BCA |
| 5 | Siva . M | B.Com |
| 6 | Karpakalakshmi | BCA |
| 7 | Indira Priyadharshini | B.Com |
| 8 | Kalaiselvi | BCA |
| 9 | Jayalalitha | BCA |
| 10 | Chitra. K | BCA |
| 11 | Meenakshi. R . | B.Sc Computer Science |
| 12 | Dharmaraj | B.Com |
| 13 | Ponni | B.Sc information Technology |
| 14 | Maheswari. R | B.SC Micro Biology |
| 15 | Geetha. V | B.Com |
| 16 | Kalaivani. K | B.Sc Computer Science |

**Batch - 2009 - 2012**

| S.No | Name | Department |
|---|---|---|
| 1 | Ishwarya. D | B.Sc Computer Science |
| 2 | Chanthirakala. R | B.A |
| 3 | Rajesh | B.A |
| 4 | Nagalakshmi. T.K | B.Sc Biotechnology |
| 5 | Varadharajan. R | B.SC Bio Chemistry |
| 6 | Baby. A | BBA |
| 7 | Suganya. P | BBA |
| 8 | Abirami. A | B.Sc information Technology |
| 9 | Chinnasami | BHM |
| 10 | Vidhya. K | B.Com |

(8)

# Annai New Revolution Beneficiary List

**Batch - 2010 - 2013**

| S.No | Name | Department |
|---|---|---|
| 1 | Vaitheeswari | B.A |
| 2 | Shamili. D | B.A |
| 3 | Shahul Hameed. S | B.SC Chemistry |
| 4 | Priya. J | BBA |
| 5 | Arunkumar. K | B.Sc information Technology |
| 6 | Prabha .B | B.Sc information Technology |
| 7 | Priya. J | BBA |
| 8 | Narasimma Perumal. M | BCA |
| 9 | Sankesh. E | BCA |
| 10 | Sakthivel. M | BCA |
| 11 | Ramkumar. A | BCA |
| 12 | Vembu. M | B.Com |
| 13 | Priya. D | B.Com |
| 14 | Maithilli. R | B.SC Visual Communication |
| 15 | Geetha. R | BBA |
| 16 | Senbagarasi | B.A |
| 17 | Tamilselvi. C | B.Sc Mathematics |
| 18 | UshaRani. M | B.Sc Physics |
| 19 | Bhuvaneswari. S | B.Com |
| 20 | Muthulakshmi. S | B.A |
| 21 | Saranya. N | B.Sc information Technology |

**Batch - 2011 - 2014**

| S.No | Name | Department |
|---|---|---|
| 1 | Sangeetha. G | B.A |
| 2 | Saranya. R | B.A |
| 3 | sathiya .S | B.A |
| 4 | Prabu. S | B.A |
| 5 | Nirmalanancy. U | B.Com |
| 6 | Divya. S | B.com |
| 7 | Kalaiyarasi. A | B.com |
| 8 | Saranyalakshmi | BCA |
| 9 | Mathavan. P | BCA |
| 10 | Manikandan. S | DME |
| 11 | Anushiya. P | B.A |
| 12 | Divya. M.R | B.Sc Computer Science |
| 13 | Aruna Devi | B.A |
| 14 | Aruljothi. D | B.Com |
| 15 | Ilayarani. N | B.Sc Physics |

## Annai New Revolution Beneficiary List

**Batch - 2012 - 2015**

| S.No | Name | Department |
|---|---|---|
| 1 | Gowthaman. K | BBA |
| 2 | Divya. C | B.Com |
| 3 | Kasthuri. V | B.Sc Mathematics |
| 4 | Mariya Jenci. J | MCA |
| 5 | Nivetha. M | MCA |
| 6 | Venkatesh. R | DME |
| 7 | Kathiresan. M | DME |
| 8 | Syedhalimullah. S | B.E ECE |
| 9 | Kailashkumar. R | B.E Mechanical |
| 10 | Saranya. T | B.Ed |
| 11 | Tamilmozhi. R | B.Ed |

# ANNAI NEW REVOLUTAION BENIFICIARY PHOTO'S 2008-2011













# ANNAI NEW REVOLUTAION BENIFICIARY PHOTO'S
## 2009-2012











# ANNAI NEW REVOLUTAION BENIFICIARY PHOTO'S
## 2010-2013



# ANNAI NEW REVOLUTAION BENIFICIARY PHOTO'S 2011-2014















# அன்னையின் புதியப் புரட்சி

















# 'அடடடே' திட்டம்... ↙ அசத்தும் மாணவர்கள்



அஸன் முகமது



சரண்யா



இளஞ்செழியன்

# கல்வியையும் நமக்கு



ஹுமாயுன்



மணி

'காசிருந்தால்தான் கல்வி' என்கிற இன்றைய காலகட்டத்தில், பணம் கட்ட முடியாமல் தத்தளிக்கும் ஏழை மாணவர்களுக்கு சக மாணவர்களே ஒரு அமைப்பை நிறுவி, அதன் மூலமாக உதவி செய்து வருபவது நெஞ்சத்தை ஈர்க்கும் ஆச்சர்யம்தானே... சக மாணவர்களுக்கு கைகொடுத்துக் கல்வியை வளர்க்கும் இந்த நெகிழ்ச்சியான முயற்சியை கும்பகோணம் அருகே உள்ள அன்னை கல்லூரி மாணவர்கள்தான் அரங்கேற்றி வருகிறார்கள் (இந்தக் கல்லூரியில்தான் கடந்த வருடம் ஜூவி சுட்டிக் காட்டிய 116 மாணவர்களுக்கு இலவச ஸீட் கொடுக்கப்பட்டது. அதுகுறித்து அப்போதே 'ஒளி 116' என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டிருந்தோம்).

கும்பகோணத்தை அடுத்த கோவிலாச்சேரி கிராமத்தில் உள்ளது அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி. 'அன்னையின் புதிய புரட்சி' என்கிற அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் படிக்க வசதியில்லாத ஏழை மாணவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்லூரியின் பேராசிரியரான இளஞ்செழியன், "மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் அன்னை கல்வி குழுமத்தின் கீழ் படித்து வருகிறார்கள். இதில் சுமார் 250 மாணவர்கள் கல்லூரி நிர்வாகத்தால் இலவசமாகப் படித்து வருகின்றனர். எக்ஸாம் பீஸ் கட்டக் கூட வழியின்றித் தவிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் எங்களால் உதவுவது சாத்தியமில்லாதது. இந்தச் சூழ்நிலையில்தான் மூன்றாம் ஆண்டு படிக்கும் அஸன் முகம்மது என்ற மாணவனும் அவனுடைய நண்பர்களும் எங்களிடம் வந்து, பீஸ் கட்ட முடியாதவர்களுக்கு உதவ ஒரு ப்ளான் இருப்பதாகச் சொன்னார்கள். அதுதான் புதிய திட்டமாக எங்கள் கல்லூரியில் இப்போது அமல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. கல்லூரிக்கு வரும் ஒவ்வொரு மாணவரும் தினமும் இரண்டு ரூபாய் கொடுத்தால், அதன் மூலமாக ஏழை மாணவர்களுக்கான முழுப்படிப்பு செலவையும் ஏற்க முடியும் என முதலில் கணக்கிட்டோம். ஆனாலும் மாணவர்களிடத்தில் எதையும் வற்புறுத்தி வாங்கக் கூடாது என்பதற்காக ஏழை மாணவர்களுக்கு உதவும் நோக்கம் குறித்து விளக்கிச் சொன்னோம். அதன்படி திட்டம் துவங்கிய மூன்றே மாதத்தில் முப்பத்தைந்து மாணவர்களுக்கு உதவியிருக்கிறோம்..." என்றவர், நம்மை மாணவர்களிடம் அறிமுகம் செய்து வைத்தார்.

இந்தத் திட்டத்தை உருவாக்கிய அஸன் முகமது என்ற மாணவர், "என்னோட பிரெண்ட் ஒருத்தன் பீஸ் கட்ட வழியில்லாததால படிப்பை பாதியிலேயே நிறுத்த முடிவு செஞ்சிருந்தான். எங்களுக்கு இதுபத்தி தெரிஞ்ச உடனேயே அவனுக்காக நாங்க சில பேர் பணம் சேர்த்துக் கட்டினோம். ஒருத்தரா இருந்து உதவுறதுதான் கஷ்டம். ஆனா, ஆளும்பேருமா சேர்ந்தா மலையைக்கூட புரட்டிப் போட்டுடலாம். இந்த ஐடியாவை கல்லூரி சேர்மன் ஹுமாயுன் , முதல்வர் மணி ஆகியோரிடம் சொன்னப்ப அவங்க அதைப் பாராட்டி முதல் நிதியாக 4,000 ரூபாய் கொடுத்து ஊக்கப்படுத்தினாங்க. பேராசிரியர்களும் மாத சம்பளத்தில ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்க முன்வந்தாங்க. மொத்தமா சேருற பணத்தை ஃபீஸ் கட்ட வழியில்லாத மாணவர்களுக்குக் கொடுக்கிறோம். இதுக்காகவே வங்கியில தனியா ஒரு கணக்கு தொடங்கியிருக்கிறோம். எங்களுக்கு அடுத்து வர்ற மாணவர்களும் இந்தத் திட்டத்தை சிறப்பா வழி நடத்தப் போறதா சொல்றாங்க!" என்றார் சந்தோஷமாக.

"இதேபோல மாணவர்கள் கைகோத்து செயல்பட்டால், யாரோட படிப்புக்கும் வறுமையால முற்றுப்புள்ளி வைக்க வேண்டியிருக்காது"

இக்கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பி.சி.ஏ. படிக்கும் சரண்யா, "ஒரு நாளைக்கு ரெண்டு ரூபாய் கொடுக்கணும்கிறதுதான் எல்லோரும் சேர்ந்து எடுத்த முடிவு. ஆனா, யாரும் அப்படிக் கணக்குப் போட்டுக் கொடுக்கிறது இல்லை. அத்தியாவசிய செலவு போக கையில எவ்வளவு மிச்சம் இருக்கோ அதை இந்தத் திட்டத்துக்குக் கொடுத்திடுவோம். என்னோட தோழி சுலைகா பேகம் ஒரு மாணவியோட படிப்புக்கான முழு செலவையும் ஏத்துக்கிட்டாள். மாதா மாதம் எவ்வளவு தொகை சேர்ந்தது, அதனால யார் யார் பயனடைஞ்சாங்கங்கிற எல்லா விவரங்களையும் மாணவர்கள் அறிஞ்சுக்கிற விதமா வெளியிடுறதால, இந்தத் திட்டத்தில பெருமைதான் உண்டாகுதே தவிர எந்தப் பிரச்னையுமே வர்றதில்லை..." என்றார்.

அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வரான டாக்டர் மணி, "மாணவர்களே சேர்ந்து அவங்களுக்கு அவங்களே உதவி பண்ணிக்கிறதைப் பார்க்கிறப்ப நெகிழ்ச்சியா இருக்கு. மற்ற கல்லூரிகளிலும் இதேபோல மாணவர்கள் கைகோத்து செயல்பட்டால், யாரோட படிப்புக்கும் வறுமையால முற்றுப்புள்ளி வைக்க வேண்டியிருக்காது" என்றார்.

அன்னை கல்விக் குழுமத்தின் சேர்மன் ஹுமாயுன், "பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப் போட்டோருக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை சமீப காலமாக அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. அரசின் உதவித் தொகையைப் பெற்றுப் படிப்பை முடித்துவிடலாம் என நினைத்து கல்லூரிகளில் சேர்ந்த எத்தனையோ மாணவர்கள் அரசு உதவி கிடைக்காததால், பாதியிலேயே படிப்பை நிறுத்திவிடுகிற கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. கல்வி உதவிக்காக மட்டுமல்லாமல், விளையாட்டு உள்ளிட்ட ஆக்கபூர்வ முன்னேற்றங்களுக்கும் மாணவ சமுதாயத்தினர் இப்படி பரஸ்பரம் உதவிக் கொண்டால், எத்தனையோ நல்ல கனவுகள் சுகமாக நிறைவேறும்!" என்றார்.

- சி.சுரேஷ்

படங்கள்: கே.குணசீலன்

# நாமே...



புதிய புரட்சி மாணவர்கள் அமைப்பு...

அனுப்புநர் : -

தெ. ஐஸ்வர்யா,
மூன்றாமாண்டு கணினி அறிவியல்.
அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவிலாச்சேரி.

பெறுநர் : -

உயர்திரு. ஐயா அவர்கள்,
அன்னை புதிய புரட்சி தலைவர்,
அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோவிலாச்சேரி.

மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு :-

வணக்கம். நான் ஏழ்மையான குடும்பம் என்னால் கல்வி கட்டணம் செலுத்த முடியாதநிலை அந்த நிலையில் அன்னை புதியபுரட்சி திட்டத்தின் மூலம் என் வாழ்க்கைக்கும் கல்விக்கும் மறுபிறவி கிடைத்தது என்று கூறலாம். அதனால் எங்கள் குடும்பமே தங்களுக்கு நன்றி சொல்ல கடமைபட்டுள்ளோம். நான் படிப்பு முடித்தவுடன் நான் செய்யும் நன்றி விதமாக என்னால் அன்ன உதவிகளை கண்டிப்பாக செய்வேன். எனக்கு உதவி செய்த அனைத்து நல் இதயங்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றிகள்.

நன்றி

இப்படிக்கு,
தங்கள் மாணவி,
தெ. ஐஸ்வர்யா.

From :

S. Muthulakshmi,

II B.A Eng "A",

Annai college of Arts & Science,

Kovilacheri.

To :

Annai Institution

Annai college of Arts & Science,

Kovilacheri.

Respected sir,

I have been studying II B.A English in our college. I feel proud to say one thing that I am also one among the beneficiants of Annai Revolution Therefore. I express my heartful of happiness to all and I thank to the Institution

Thanking You

Your's obediently

S. Muthulakshmi

அன்னை புதிய புரட்சி இயக்கம்.

நான் இரண்டாம் ஆண்டு காட்சி தொடர்பியல் துறையில் படித்துவருகிறேன். நான் கல்லூரியில் சேர்ந்த போது என்னால் பருவக் கட்டணம் செலுத்த இயலாத நிலையில் இருந்தேன். அப்போது எங்கள் துறை தலைவி அவர்கள் நமது கல்லூரியில் அன்னை புதிய புரட்சி இயக்கம் ஒன்று இருக்கிறது என்று கூறினார். நான் அவர்களிடம் சென்று எனது சூழ்நிலையை பற்றி கூறினேன். அவர்கள் எனக்கு உதவி செய்து பருவக்கட்டணம் செலுத்தி வருகிறார்கள் அதன் மூலமாக எந்தவித கஷ்டமும் இல்லாமல் என்னால் எனது படிப்பில் கவனம் செலுத்த முடிகிறது. அன்னை புரட்சி இயக்கத்திற்கும் அதன் நிர்வாகத்திற்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

இப்படிக்கு II. B.Sc.

VIS.COM மாணவி.

R. மைதிலி.

From:

T. K. Nagalakshmi
III B.Sc., Biotechnology
Annai College of arts & science
Kovilacheri

To:

Annai new revolution Co-ordinator
Annai College of arts & science
Kovilacheri

Respected sir;

I, express my sincere thanks to annai new revolution because I was born and brought up in poor family. due to insufficient finance. I am unable to continue my education. In that time annai revolution helped me to continue my education. I thank annai revolution co-ordinator Illanchiliyan sir and thanks to M.I Humayun sir and the Management for the support

Thank you

Your's faithfully
T.K.Ngl

From

R. Saranya

B.A english literature I year

Annai college of Arts & science

kovilacheri.

To

The director of Annai New revolution

Annai college of arts & science

kovilacheri.

Respected sir,

I am a student of Annai college studing B.A english literature, This is happened through this scholoarship of Annai new revolution only. Because they are providing the good amount as a scholoarship to develop our educational Field. we are very much benefitted from this great association. Now the time to give

my hearty thanks to this association and who are all giving this.

oppourtunity to me. once again thanks to all and my college.

Thanking you,

yours faithfully.

P. saranya.

From

S. Sathya.

B.A English Literature I year

Annai college Of Arts & Science

kovilacheri.

To

The director Of Annai New revolution

Annai college Of Arts & science

kovilacheri.

Respected Sir,

I am a Student Of Annai college Studing B.A English Literature, this is happened through this Scholoarship Of Annai New revolution Only. Be cause they are providing the good amount as a scholoarship to develop our educational field. we are very much benefitted from this great association.

Now the time to give my hearty thanks to this association and who are all giving this Oppourtunity to me.

Once again thanks to all all my College.

Thanking you,

Yours faithfully.

S. Sanya.

நான் அன்னையின் புதிய புரட்சி திட்டத்தில்
சேர்ந்ததற்கு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.
நான் பயில்வதற்கு உதவும் அனைத்து
நெஞ்சங்களுக்கும் நன்றி. உங்கள் உதவியை
என்றும் மறவாமல் நன்றாக படிப்பேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
ச. சாகுல் ஹமீது.

S. SHAHUL HAMEED
II B.Sc CHEMISTRY

From :

A. Abirami
B.Sc IT -(III) year
Annai college of Arts & science
kovilacheri

To :

the principal
Annai college of Arts & science
kovilacheri

Respected Sir,

I am Studying B.Sc IT (information technology) final year. by using Annai new revolution. So that I would like to convey my thanks to Annai college of Arts & science to giving me a opportunity.

thanking you.

yours Obediently
A. Abirami

நன்றி கடிதம்.

1.2.2012

அன்பார்ந்த அன்னை குழுமத்திற்கு.

நான் அன்னையின் புதிய புரட்சி என்ற கல்வி கற்கும் திட்டத்தில் இணைந்து, நான் இலவசமாக பருவ கட்டணம் ஆற்றி கல்வி பயின்று வந்தேன். இதற்கு உறுதுணையாக இருந்த அன்னையின் புதிய புரட்சி என்ற திட்டத்திற்கும் அன்னையின் கல்லூரி முதல்வர், செயலாளர் மற்றும் புதிய புரட்சியின் இயக்குனர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நான் கல்வி நிலையின் முன்னேறி வேலை வாய்ப்புக்கு சென்றபின், என்னால் முடிந்த உதவியை அன்னையின் புதிய புரட்சி என்ற கல்வி வழங்கு திட்டத்திற்கு உதவி புரிவேன் என இக்கடிதத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னையின் புதிய புரட்சி என்ற திட்டம் மேன்மேலும் வளர்ச்சி பெற என்னுடைய வாழ்த்துக்களையும், மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள
மாணவன்.
இரா. வரதராஜன்.
III ஆம் ஆண்டு
உயிர் வேதியியல் துறை

29

From :

A. Abirami

B.Sc IT -(III) year

Annai college of Arts & science

kovilacheri

To :

the principal

Annai college of Arts & science

kovilacheri

Respected sir,

I am studying B.Sc IT (information technology) final year. by using Annai new revolution. So that I would like to convey my thanks to Annai college of Arts & science to giving me a opportunity.

thanking you.

yours Obediently

A. Abirami

From:-

M. Osha Rani,
II - B.Sc - Physics,
Annai College,
Kovilacherri.

Kovilacherri,
31 - 1 - 2012.

To :-

The Principal,
Annai College,
Kovilacherri.

Respected sir,

I am heart fully thank you for the unequal help (Revolution). And also i am really happy to get the help. I assure you sir, I never forgot the help and our College.

Thanking you

Your's obediently,
M. Usha Rani
II Physics.

From

G. Sangeetha
B.A. English Literature I Year
Annai college of Arts & Science
Kovilachari

To

The director of Annai new revolution
Annai college of Arts & Science
Kovilachari.

Respected sir,

I am a student of Annai college studying B.A English Literature, this is happened through this scholoarship of Annai new revolution only. Because they are providing the good amount as a Scholoarship to develop our educational field. we are very much benefitted from this great association now the time to give my hearty thanks to this association and who are all

giving this oppourtunity to me

once again thanks to all all my

college

Thanking you,

yours faith fully

G. Sangeetha

(35)

*S.S.Mahilpandian*
Sr. Vice President (HR & Admin)

**Mr.Humayun** **15th Mar 2010**
**Director,Annai College,**
**Kumbakonam**

Dear Mr.Humayun,

I have no words to appreciate you and your brothers for tendering noble service i.e. providing education to the society and needy people in Kumbakonam and surrounding areas of Tamilnadu. I am recalling the phrase " Service to the Society is Service to Almighty(GOD).

To participate in your Noble service and Providing education to needy people, I would also like to join in your Mission. As I discussed with you, I am donating Rs.1,00,000/-(One lac only) for the said purpose and the cheques are being sent in favour of 'ANNAI NEW REVOLUTION Ac No.05380100004909, Bank of Baroda.

Kindly acknowledge receipt of the same. Convey my best wishes to your students and let them prove themselves as worthy enough and bright student of the college and support you to achieve your college Vision and Mission.

Regards,

**S.S.Mahilapandian**
**ssmp1@rediffmail.com**

Encl.: 1. Cha No. 256309 For 50,000/- Dt 15/3/10
2. Cha No. 256310 For 50,000/- Dt 15/3/10

(36)

பேரா. ம. இராமகோபால், எம்.ஏ., எம்.பில்.,
ஆங்கில இணைப் பேராசிரியர் (ஓய்வு)
15, வ. உ. சி நகர்,
என். கொசவம்பட்டி,
நாமக்கல் - 637001. அ.பே. 9965412116.

8/4/16
802

அன்புடையீர்!
வணக்கம்.

கடிதம் கண்டேன்
களிப்பு மிகக் கொண்டேன்!

'மார்க் வார்த்தைகள் வாழ்க'-
மின் உலகத் தொகுப்பிற்கோர் - இது
மின் நூலக் காவலன்றோ?

ஆனாலும்,
பாடல் தொகுத்தல் அரிய அரிய,
பாரம்பரிய தொகுப்போ அன்றோ?

அன்பு உள்ளத்திற்கு
அகத்திலிருந்து நன்றி!

உடைக்கும் காது,
உணவுக்கும் காது,
உடல் அழகுக்கும் உற்றதாம் காது,
கற்பதற்கும் கவிதைக்கும் காது,
கண்ணியப் பொருளுக்கும் காது,

கைதட்டுதலுக்கும் காது,
கைபேசி நுகர்தலுக்கும் காது,
பாடல் கேட்குதல் காது,
பொன்னாபரணமும் காது,
பார்க்கும் பார்வைக்கும் காது,
பேசும் மொழிக்கும் காது,

இப்படி,
தேர்வுக்கு சென்ற
"தாயே! தாயே!!" எனக் கூவும்
கன்றாய் வந்தையால்,

தாய் பார்க்காது, மாணவர்
கண்கள் பனிப்பது பார்த்து.
கசிந்துருகும் உங்கள் கருணை உள்ளம்
காசினியால் யாருக்கு வரும்?

தாங்கள்.
மாணவர்பால் கொண்ட அன்பும்,
மாறாத தமிழ்பால் கொண்ட காதலும்
வற்றாத ஜீவநதி போல்
வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்க.
வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகிறேன்!

தங்களன்புமிக்க மாணவன்
V.
(ப. நெல்சேகரன்)

நாமக்கல்,
05-04-2K10.

இணைப்பு: ரூ.1000/= க்கான காசோலை — SDCCB, NRL.
dt. 05/04/2K10 - No. 923343

# ஒளி 116

"நான் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். கஷ்டப்பட்டுப் படிச்சு ப்ளஸ் டூ-வுல 897 மார்க் வாங்கியிருக்கேன். ஆனாலும், மேற்கொண்டு படிக்க முடியல. ஏற்கெனவே என் தங்கச்சியும் படிக்க வழியில்லாம இப்ப கூலி வேலைக்குப் போய்க்கிட்டு இருக்கா. அதே நிலைமைதான் எனக்குமா?"

"சார், எங்க குடும்ப சூழ்நிலைக்கு நான் ப்ளஸ்-டூ வரைக்கும் படிச்சதே பெரிய விஷயம். இருந்தும் முடிந்தவரை படித்து 897 மதிப்பெண்கள் வாங்குனேன். என் படிப்புக்கு உதவுவீர்கள் என்கிற பெரும் நம்பிக்கையுடன் இந்த மடலை எழுதுகிறேன்..."

-பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியான நாளிலிருந்து கல்வி உதவி கேட்டும், தங்களின் ஏழ்மை நிலையைச் சொல்லியும் ஜூ.வி-க்குப் பல திசைகளில் இருந்தும் இதுபோன்ற கோரிக்கைக் கடிதங்கள் வந்து கலங்கடித்துக் கொண்டே இருக்கின்றன.

சரஸ்வதி இருந்தும் லட்சுமி இல்லாததால், கல்லூரி வாசலைக் கனவில் மட்டுமே மிதிக்கும் அவர்களுக்கு- அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் பொதுநல ஆர்வலர்கள் மூலமாக முடிந்த உதவிகளையெல்லாம் அவ்வப்போது ஜூ.வி. செய்துகொண்டிருப்பது வாசகர்கள் அறிந்த விஷயம்தான்.

இந்த நிலையில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தைச் சுற்றி இருக்கும் கிராமங்களில் இருந்து மேற்படிப்புக்கு உதவி கேட்டு வந்த கடிதங்கள், தொலைபேசி அழைப்புகளின் எண்ணிக்கை நம்மை மலைக்க வைத்தது.

நமக்குத் தெரிந்த சமூக ஆர்வலர்கள் சிலரிடம் இதுகுறித்துப் பேசுகையில், "படிப்புக்குவழியில்லாமல் திருப்பூருக்கும் சென்னைக்கும் வேலைக்குப் போய் திண்டாடுபவர்களில் கும்பகோணம் பகுதியைச் சேர்ந்தவர்கள் நிறைய இருக்கிறார்கள். அதனால் அந்த ஏரியாவில் இருக்கும் தனியார் கல்லூரி நிர்வாகிகளிடம் பேசி ஏழை மாணவர்களுக்கு உதவ வழிசெய்யலாம்" என்றார்கள்.

அதன் அடிப்படையில் கல்விப் பணி மட்டுமல்லாது, பொதுநல விஷயங்களிலும் ஆர்வம் காட்டிவரும் கோவிலாச்சேரி அன்னை கல்லூரி நிர்வாகிகளை அணுகினோம். சென்னை-கும்பகோணம் சாலையில் கும்பகோணத்திலிருந்து 8-வது கிலோமீட்டரில் இருக்கிறது, கோவிலாச்சேரி அன்னை கல்லூரி. நமக்கு வந்த ஏக்கக் கடிதங்களின் சாரத்தை அவர்களிடம் சொன்னோம்.

மனிதாபிமானத்தோடு நம் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கல்லூரி நிர்வாகிகள், "ஒரு மாணவர் தன் மூன்று வருடப் படிப்பை முடிக்க குறைந்தபட்சம் இருபத்தைந்தாயிரம் ரூபாயாவது செலவு செய்ய வேண்டியிருக்கும். அதாவது அரசாங்க கல்விக் கட்டணம் மட்டும். அந்த வகையில் அதிகபட்சம் இருபது மாணவர்களுக்கு எங்களால் இலவசக் கல்வி வழங்க முடியும். ஜூ.வி. கட்டிக்காட்டும் 20 ஏழை மாணவர்களுக்கு நயாபைசா செலவில்லாமல்



இலவச ஸீட் கொடுக்க நாங்கள் தயார். அதோடு கும்பகோணத்தைச் சுற்றி இருக்கும் இதர ஏழை மாணவர்களைத் தேடுகிற முயற்சியிலும் நாங்கள் ஜூ.வி-யோடு கைகோக்கிறோம்' எனச் சொல்லி இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்தினார்கள். அடுத்தகணமே கடிதம் எழுதிய கண்மணிகளை சந்திக்கக் கிளம்பினோம்.

நிம்மக்குடி கிராமத்தில் விமலாதித்தன் வீட்டை நாம் தேடிக் கொண்டிருக்கையில், எப்படியோ தகவலறிந்து மூச்சிறைக்க ஓடிவந்தார் விமலாதித்தன்.

"896 மார்க் எடுத்திருக்கும் நீங்க என்ன கோர்ஸ் படிக்க ஆசைப்படறீங்க?" எனக் கேட்டோம்.

"பி.எஸ்ஸி. கணிதம் படிக்கணும்கிறதுதான் என் ஆசை. தஞ்சாவூர் கவர்ன்மென்ட் காலேஜில் இந்த மார்க்குக்கு ஸீட் கிடைக்கும்னு சொன்னாங்க. ஆனா, இங்கே இருந்து தஞ்சாவூருக்குத் தினமும் போக வர, சாப்பாடுன்னு எப்படியும் ஒரு நாளைக்கு ஐம்பது ரூபாய்க்கு மேல செலவாகிடும். காலேஜ் ஃபீஸ், தினசரி செலவு இதெல்லாம் எங்க குடும்பத்துக்குத் தாங்காதுங்க... ஜூ.வி. முயற்சி எடுத்து நான் படிக்கறதுக்கு கும்பகோணம் பகுதியிலேயே ஏதாவது உதவி பண்ண முடிஞ்சா..." என்று ஏக்கத்தோடு கோரிக்கையை வைத்தார்.

"கும்பகோணம் கோவிலாக்குறிச்சி அன்னை கல்லூரியில் சேர்ந்து மூன்று வருடங்களும் ஒரு பைசாகூட செலவில்லாமல் நீங்க படிக்கலாம். உங்கள் பஸ் கட்டணத்தையும் கல்லூரி நிர்வாகமே ஏற்றுக்கொள்ளும். திருப்திதானே..." என நாம் சொன்னதுதான் தாமதம். நெகிழ்ந்துபோன விமலாதித்தனுக்கு வார்த்தைகள் வரவில்லை; ஆனந்தக் கண்ணீர்தான் வந்தது.

அடுத்து போன் மூலமாகத் தன் வறுமையை நம்மிடம் சொல்லி இருந்த ஆலூர் கிராமத்தைச் சேர்ந்த ரஜபு நிஷாவைத் தேடிப் போனோம்.

"சாப்பாட்டுக்கே அல்லாடுற குடும்பத்தில பிறந்துட்டு, மேற்படிப்பு படிக்க ஆசைப்படறது தப்புன்னு அம்மா சொன்னாங்க. அப்பாவை இழந்துட்டு ப்ளஸ்-டூ வரைக்கும் படிச்சதே பெரிய விஷயம். அக்கம் பக்கத்து வீடுகள்ல வேலைபார்த்து அதுல கிடைக்கிற வருமானத்தை வச்சுதான் அம்மா என்னைப் படிக்க வச்சாங்க. பி.எஸ்ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கணும்னு ஆசை. அதுக்குக் குறைஞ்சது அறுபது, எழுபதாயிரம் செலவாகும். அவ்வளவு பணத்துக்கு எங்கே சார் போறது?" -இயலாமை வார்த்தைகளில் வழிய ரஜபு நிஷா கண்கலங்க,

விஷயத்தைச் சொன்னோம். 'மொத்த செலவு களையும் கல்லூரி நிர்வாகமே ஏற்றுக்கொள்ளும்' என்பதையும் நாம் சொன்னதும், ஆனந்தத்தில் துள்ளத் தொடங்கிவிட்டார் ரஜபு நிஷா.

அடுத்து அணைக்கரை ஏரியாவைச் சேர்ந்த இலங்கேஸ்வரியை சந்தித்தோம். "அப்பா நாலு வருஷமா எங்கே போனார்னே தெரியலை. அம்மா, விவசாய கூலி வேலை பார்த்துக் குடும்பத்தைக் காப்பாத்துறாங்க. நீங்க எந்த கோர்ஸில் சேர்த்து விட்டாலும் படிக்கிறேன். நான் படிச்சாதான் எங்கம்மாவை நாளைக்கு கஷ்டப்படாம காப்பாத்த முடியும்' என்றார் கண்கள் பனிக்க.

நம்முடன் வந்திருந்த அன்னை கல்லூரி நிர்வாகிகள் ஃப்ரீ ஸீட்டுக்கு ஏற்பாடு செய்வதாகச்

# மெகா அட்மிஷன் ஆக்ஷன்!





அந்தக் கல்லூரி...



ஹிமாயூன் கபீர், அப்துல் கபூர், அன்வர் கபீர்...



நஜிமுதீன்

இஸ்லாமிக் சோஷியல் வெல்ஃபேர் அசோஸியேஷன்' தரப்பிலிருந்தும் வறுமையால் படிப்பைத் தொலைத்த பல மாணவர்களை நம்மிடம் அறிமுகப் படுத்தினார்கள்.

பெட்டிக்கடைக்காரரின் மகன் முகமது சித்திக் என்ற மாணவனுக்கு பி.எஸ்ஸி. கணிதமும், மீன் மார்க்கெட்டில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் ஆசாத் அலிக்கு பயோ கெமிஸ்ட்ரியும், கறிக் கடைக்காரரின் மகன் பைசலுக்கு பி.பி.ஏ-வும் உடனடியாக ஒதுக்கீடு செய்யப்பட்டன.

## சாஸிதாவுக்குத் தீர்வு!

பேராவூரணியில் இருந்து சாஸிதா என்ற மாணவி நம்மைத் தொடர்பு கொண் டார்.

"நாங்க ரொம்ப வறுமையான குடும் பத்தைச் சேர்ந்தவங்கண்ணே. அப்பா கிடையாது. அம்மா துணிமணிகளை வாங்கி நடந்து போய் வியாபாரம் பண்றவங்க. இவ்வளவு வறுமையிலும் 1080 மார்க் வாங்கினேன். மேற்கொண்டு படிக்கிறது எப்படின்னு தெரியலை. அண்ணா யுனிவர் சிட்டிக்கு அப்ளிகேஷன் போட்டிருக்கேன். எப்படியும் ஃப்ரீ ஸீட் கிடைச்சிடும். ஆனா, இதர செலவுகளைப் பெரிய மனசுள்ள யாராவது ஏத்துக்கிட்டா புண்ணியமா போகும்" என சோகத்தோடு சொன்னார் சாஸிதா.

கும்பகோணத்தில் இருக்கும் ஹலிமா எஜுகேஷனல் அறக்கட்டளை நிர்வாகிகளை சந்தித்து விஷயத்தைச் சொன்னோம்.

"சாஸிதாவின் படிப்பு செலவுகளை யும் இதர செலவுகளையம் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இனி சாஸிதா எங்கள் குழந்தை!" எனப் பெருமைதோடு சொன்னார்கள் ஹலிமா அறக்கட்டளை நிர்வாகிகள்.

இதையெல்லாம் பார்த்து சிலிர்த்துப் போன கிஸ்வா இஸ்லாமிக் சோஷியல் வெல்ஃபேர் அஸோசியேஷன் நிர்வாகிகள், "உங்களுக்கும் கல்லூரிக்கும் எப்படி நன்றி சொல்வதென்றே தெரிய வில்லை" என்றார்கள் நெகிழ்வுடன்.

மூன்று நாட்களாகத் தொடர்ந்து நாம் மேற்கொண்ட முயற்சிகளால் மொத்தம் 116 மாணவர்களின் வாழ்க்கையில் மேல் படிப்புக்கான ஒளி ஏற்றப்பட்டுவிட்டது! அத்தனை மாணவர்களின் நிலைமையையும் எழுத வேண்டுமென்றால் 'உருக்கம் ஜூ.வி.' என தனி மலரே போட வேண்டியிருக்கும்.

கல்லூரியின் நிர்வாகிகள் அப்துல் கபூர், ஹுமாயூன் கபீர், அன்வர் கபீர், அகமது யாசின் ஆகியோருக்கு ஜூ.வி. சார்பில் நெஞ்சு நிறைந்த நன்றிகளைச் சொன்னோம்.

"கலை, அறிவியல் மட்டுமல்லாது பாலிடெக்னிக், ஆசிரியர் பயிற்சி வகுப்பு என பலவற்றிலும் ஏழை மாணவர்களுக்கு இலவச ஒதுக்கீடு செய்திருக்கிறோம். மத வேறுபாடுகள் ஏதுமின்றி ஜூ.வி. சுட்டிக்காட்டிய பல்வேறு தரப்பு மாணவர்களுக்கும் ஸீட் கொடுத்திருக்கிறோம். மிகவும் வறுமையில் தவிக்கும் மாணவர்களுக்கான பஸ் மற்றும் சாப்பாட்டு செலவுகளையும் நாங்களே ஏற்றுக்கொள்கிறோம். பல வருடங்களாகக் கல்விப் பணியில் ஈடுபட்டிருந்தாலும், இந்தக் கணத்தில் ஏதோ சாதித்ததுபோல் மனதுக்குள் நிறைவு ஏற்படுகிறது. எங்களைப் போல் ஒவ்வொரு கல்லூரியும் வருடத்துக்குப் பத்து ஏழை மாணவர்களைத் தேர்ந்தெடுத்து இலவச ஸீட் கொடுக்கத் தொடங்கினால் அது புண்ணியமாக மட்டுமல்ல, அடுத்த தலைமுறையை செம்மைப்படுத்தியதாகவும் அமையுமே..." என்றார்கள் பரவசம் கலந்த நம்பிக்கையுடன்.

அத்தனை மாணவ-மாணவிகளுக்கும் அட்மிஷன் முடித்துவிட்டு நாம் அந்தக் கல்லூரியை விட்டு வெளியே வருகையில், இலவச கல்வி பெற்ற 116 மாணவமணிகளும் ஒருசேரக் கூடி, "தேங்க்ஸ் ஜூ.வி." என சிலிர்ப்பான குரல் எழுப்ப...

'பேனா பிடித்ததன் பாக்கியம் அடைந்தோம்' என்று பதிலுக்கு எழுந்தது நமக்குள் சிலிர்ப்பு!

- இரா.சரவணன்

படங்கள்: 'பாய்ஸ்' ஆனந்த்

சொல்ல... இலங்கேஸ்வரியின் கண்களில் நம்பிக்கை ஒளி!

அடுத்தடுத்து நாம் சந்தித்த பல மாணவ-மாணவிகளின் சோக நிலை, அந்தக் கல்லூரி நிர்வாகிகளை ரொம்பவே அசைத்துப் பார்த்துவிட்டது.

"பணம் இல்லை என்ற ஒற்றைக் காரணத்தினால் யாருடைய படிப்பும் பாதியில் நின்று விடக்கூடாது. உங்களோடு வந்த பிறகுதான் ஒவ்வொரு மாணவர்களுக்குள்ளும் இருக்கும் உருக்கமான சோகங்கள் எங்களுக்குத் தெரிய வருகிறது. இப்படிப்பட்ட மாணவர்கள் எத்தனை பேராக இருந்தாலும் அவர்களுக்கு ஃப்ரீ ஸீட் கொடுக்கிறோம்!" என்று அவர்கள் சொன்னபோது, நம் திகைப்போடு பொறுப்பும் கூடிப்போனது. மனப்படைவீடு என்கிற கிராமத்தில் ப்ளஸ்-டூ முடித்துவிட்டுக் கதியற்று இருந்த பாரதிராஜா நம்மைக் கண்டதுமே பரவசமாகி விட்டார்.

"பி.எஸ்ஸி. பயோகெமிஸ்ட்ரி படிக்கணும்கிறதுதான் என்னோட ஆசை. தஞ்சாவூர் மாவட்ட கவர்ன்மென்ட் காலேஜில் இந்த கோர்ஸ் கிடையாது. பிரைவேட்ல படிச்சா ஒரு லட்ச ரூபாயாவது தேவைப்படும்..." என்று கைகளைப் பிசைந்தார். அவரைக் கொண்டு போய் நிறுத்தியபோது, அன்னை கல்லூரி முதல்வர் நஜிமுதீன், "உனக்கு இப்பவே ஸீட் ரெடி.. செலவே இல்லை. இதற்கு பிரதிபலனா அடுத்தவங்களுக்கு நீ என்ன பண்ணுவே?" எனக் கேட்டார்.

சில நொடி யோசித்த பாரதிராஜா, "சார்... எங்க கிராமத்துல முக்கால்வாசி பேருக்குக் கையெழுத்துப் போடக்கூட தெரியாது. அவங்க எல்லாருக்கும் கையெழுத்துப் போட கத்துக் கொடுக்குறது இனி என் பொறுப்பு..." என்றவர், அடுத்த நிமிடமே தன் வேலையை ஆரம்பித்து விட்டார்.


விமலாதித்தன்


ரஜபு நிஷா


இலங்கேஸ்வரி


பாரதிராஜா


ஆசாத் அலி


முகம்மது சித்திக்

இதற்கிடையில், கும்பகோணத்தில் உள்ள கிஸ்வா

## பாட்டி சொல்லைத் தட்டாதே!

ஜூ.வி. மூலமாக இலவச ஸீட் முயற்சி நடப்பதைத் தெரிந்துகொண்டு நம்மை வந்து சந்தித்தார், அலமேலு என்கிற மூதாட்டி.


சுந்தரவள்ளியுடன், அலமேலு பாட்டி...

"எம் பேத்தி இந்த காலேஜ்ல தான் பி.காம். படிச்சா. தாயில்லாத பொண்ணு. குடும்பத்தில நடந்த ஒருசில பிரச்னைகளால பேத்தியோட படிப்பு பாதியிலேயே நின்னு போச்சு. மேற்கொண்டு படிக்க வைக்க பணமும் இல்லை. நீங்க பெரிய மனசு பண்ணி உதவுறீங்களா தம்பி?" என அலமேலு பாட்டி கேட்க, அடுத்த கணமே அவருடைய பேத்தியான சுந்தரவள்ளியை கல்லூரி நிர்வாகிகளிடம் அறிமுகப்படுத்தி, விஷயத்தைச் சொன்னோம்.

"இனி பணமே கட்ட வேண்டாம். உங்க பேத்தி படிப்பை இலவசமாகவே கன்டினியூ பண்ணட்டும்" என க்ரீன் சிக்னல் கிடைக்க, பாட்டி, பேத்தி முகத்தில் ஆனந்தக் கண்ணீர்!

## தொடருது ரகுபதி ஆக்ஷன்...

கடந்த 11.06.08-ம் தேதியிட்ட ஜூ.வி-யில் காய்கறிக் கடையில் வேலைபார்க்கும் மாணவனுக்கு இலவசமாக இன்ஜினீயரிங் ஸீட் வழங்கி, மத்திய அமைச்சர் ரகுபதி உதவி செய்தது குறித்து எழுதி இருந்தோம். இதைப் படித்துவிட்டு மேலும் சில மாணவர்கள் தங்களின் ஏழ்மை நிலையை நம்மிடம் கொட்ட, அவற்றையும் அமைச்சர் ரகுபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம்.

"ஜூ.வி-யாலும், அதன் வாசகர்களாலும் இதுவரை சுட்டிக்காட்டப்பட்ட எந்த மாணவரும் சோடை போகவில்லை. உங்கள் மூலமாக இலவசமாகப் பொறியியல் படிப்பை மேற்கொண்டு வரும் மூன்று மாணவர்களும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுவருகிறார்கள். அதனால் நீங்கள் சுட்டிக்காட்டும் மற்ற மாணவர்களுக்கும் முடிந்த உதவிகளைச் செய்ய முயல்வேன்" என உறுதி தந்திருக்கிறார் ரகுபதி!

யுவகிருஷ்ணா

# கல்விச்செல்வம் தரும் உண்டியல்!

## கைகோர்க்கிறார் சசிக்குமார்



**மாணவர்களிடமும் மக்களிடமும் உண்டியல் மூலம் பணம் வசூலித்து ஏழை மாணவர்கள் கல்வி பயில உதவுகிறது ஓர் திட்டம்**



ஏழை மாணவர்களின் கல்விக்கு, அவர்களுடன் படிக்கும் சக மாணவர்களே நிதியுதவி செய்துகொள்ளும் கல்விப்புரட்சித் திட்டம் ஒன்று கும்பகோணம் அருகே கோவிலாச்சேரி அன்னை கல்லூரியில் 'மாணவர் மறுமலர்ச்சித் திட்டம்' என்று அன்னை தொடங்கப்பட்டிருக்கிறது. கல்லூரி மாணவர்கள் இத்திட்டத்துக்கு பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

சமீபத்தில் இக்கல்லூரியில் நடந்த ஆண்டுவிழாவின் போது திரைப்பட இயக்குநர் சசிக்குமார் இத்திட்டத்தை தொடங்கிவைத்து, தன் பங்காக பதினைந்தாயிரம் ரூபாயை உண்டியலில் செலுத்தினார். அதுமட்டுமின்றி உண்டியல் கொண்டு மாவட்டம் முழுவதும் வசூலித்ததில், முதல் இரண்டு நாட்களிலேயே ஒரு லட்ச ரூபாய் திரட்ட முடிந்திருக்கிறது. ''இந்தத் தொகை மூலமாக நாற்பது மாணவர்களுக்கான ஓராண்டு கல்விச்செலவை ஈடுகட்ட முடியும்'' என்று அன்னை கல்லூரி நிர்வாகம் தெரிவிக்கிறது.

இத்திட்டம் பற்றி இயக்குநர் சசிக்குமார் சொல்கிறார்...

''கடந்த ஆண்டு கும்பகோணத்தில் இதே கல்லூரியில் நடந்த விழாவில் பேசப்போயிருந்தேன். அங்கே சில மாணவர்கள் உண்டியல் வைத்து, மாணவர்களிடையே இயன்ற அளவில் பணம் வசூலித்து, வசதியற்ற மாணவர்களின் கல்விச்செலவுக்கு உதவுவதை அறிந்தேன். 'இது அருமையான திட்டம். இதை பெரியளவில் நாடு முழுக்க விரிவாக்க வேண்டும், எல்லா கல்லூரிகளிலும் கொண்டுவர வேண்டும்'

**"ஒவ்வொரு கல்லூரியிலும் ஓர் உண்டியல் இருக்கும். அதில் குறைந்தபட்சம் ஒரு ரூபாயைக்கூட உதவும் மனம் கொண்ட யாரும் வழங்கலாம்"**



என்று பேசினேன். அப்போது மாணவர் ஒருவர் குறுக்கிட்டு, 'இதெல்லாம் சாத்தியம்தானா?' என்று கேட்டார். எனக்கு உடனடியாக என்ன பதில் சொல்லுவது என்று தெரியவில்லை. 'எனக்கு எதையும் விவரமாக பேசத் தெரியாது. செய்து காட்டத்தான் தெரியும்' என்று அவருக்குப் பதிலளித்தேன். இவ்வருடம் அதைத்தான் செய்து காட்டியிருக்கிறேன்.

இந்த 'மாணவர் மறுமலர்ச்சித் திட்டம்' மிக எளிமையானது. ஒவ்வொரு கல்லூரியிலும் ஓர் உண்டியல் இருக்கும். அதில் குறைந்தபட்சம் ஒரு ரூபாயைக்கூட உதவும் மனம்கொண்ட யாரும் வழங்கலாம். மாணவப் பிரதிநிதிகளும், சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகமும் இணைந்து அந்த உண்டியலை நிர்வகிக்கும். ஒவ்வொரு வருடமும் சேரும் தொகையை வைத்து, வசதியற்ற மாணவர்களின் கல்விக்கு அப்பணத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். தேவைப்பட்டால் அந்த உண்டியலைக் கொண்டு பொதுமக்களிடமும் பணம் வசூலிக்கலாம்.

இந்தத் திட்டத்துக்கான ஐடியா என்னுடையது கிடையாது. ஏற்கெனவே கோவிலாச்சேரி அன்னை கல்லூரி மாணவர்கள் சிறியளவில் செய்துகொண்டிருந்ததுதான். இதைப் பிரபலப்படுத்தவும், விரைவுபடுத்தவும் நான் தூண்டுகோலாக இருந்தேன். அதுவுமின்றி, ஒரு பேரியக்கமாக தமிழ்நாடெங்கும் இதைச் செயல்படுத்த வேண்டும். இத்திட்டத்தை தொடங்க நினைக்கும் எந்தக் கல்லூரிக்கும் சென்று, இதுகுறித்த பிரச்சாரத்தை முன்னெடுக்கத் தயாராக இருக்கிறேன்.

திடீரென்று சசிக்குமாருக்கு ஏன் கல்வி மீது அக்கறை என்றும், இதைச் செய்வதற்கான எண்ணம் எப்படித் தோன்றியது என்றும் கேட்கிறார்கள். சினிமாவில்தான் இதற்கென்று ஒரு ஃப்ளாஷ்பேக் எல்லாம் இருக்கும். நான் இந்த மண்ணில்தான் வாழ்கிறேன். கல்விதான் ஒருவனை கரையேற்றும் என்பதை உணர்ந்திருக்கிறேன். தனிமனித ஒழுக்கத்தில் தொடங்கி, சட்டம் ஒழுங்குப் பிரச்சினைவரை கல்விதான் ஒருவனை நெறிப்படுத்துகிறது. படிப்பதற்கு காசு இல்லை என்கிற நிலை இனி இங்கு இருக்கக்கூடாது.

இந்த உண்டியலில் பணம் செலுத்துவதால் வருமானவரிச் சலுகை கிடைக்காது. பணம் செலுத்தியவருக்குப் பெயர் கிடைக்காது. அதனாலென்ன? உங்கள் பணம் ஒரு மாணவனின் எதிர்காலத்தை ஒளிமயமாக்கப் போகிறது. அந்தத் திருப்தியைவிடப் பெரிதாக வேறென்ன வேண்டும்?

இதையெல்லாம் வலியுறுத்தி, இந்த இயக்கத்தை ஆதரித்து முன்னெடுப்பதால் எனக்கு ஏதோ அரசியல் நோக்கம் இருப்பதாக யாரும் நினைத்துவிட வேண்டாம். இத்திட்டம் ஒரு கட்சியாகவோ, அமைப்பாகவோ, சங்கமாகவோ மாறப்போவதில்லை. Informal அமைப்பு இது. ஓர் அலுவலகம்கூட இதற்கென்று பிரத்யேகமாக அமையப்போவதில்லை. இதில் தலைவர், தொண்டர் பாகுபாடெல்லாம் இல்லை.

அடுத்தடுத்து நிறைய கல்லூரிகளில் இத்திட்டத்தைத் தொடங்க வேண்டுமென்று சொல்லி என்னை அணுகுகிறார்கள். கோயமுத்தூர் ஜி.ஆர்.டி. கல்லூரி நிர்வாகம் சார்பில்கூட என்னிடம் பேசினார்கள். 'இனிமேல் ஆண்டுக்கு நான்கு மாணவர்களுக்கு இலவசக்கல்வி தருகிறோம். அவர்களை நீங்களே சிபாரிசு செய்யுங்கள். மாணவர் மறுமலர்ச்சித் திட்டத்தை எங்கள் கல்லூரியிலும் செயல்படுத்த விரும்புகிறோம்' என்றார்கள்.

நான் செய்ய நினைப்பது இதைத்தான். மாநிலம் முழுக்க இருக்கும் என்னுடைய நண்பர்கள், பத்திரிகையாளர்கள், மக்கள் தொடர்புப் பணியாளர்களைப் பயன்படுத்தி வசதியற்ற மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உதவவேண்டும். உண்டியல் முறையில் கிடைக்கும் பணத்தையும் பயன்படுத்துவோம். ஜி.ஆர்.டி. கல்லூரி போன்று தாமாகவே முன்வந்து உதவும் கல்லூரிகளையும் பயன்படுத்துவோம்.

'பிச்சை புகினும் கற்கை நன்றே'. என் நேரத்தை இனி கல்விப் பணிக்கும் செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறேன். நீங்களும் வாருங்கள். ஊர்கூடி உண்டியல் ஏந்தி கல்வித்தேர் இழுப்போம்''- உற்சாகமாகச் சொல்லி முடிக்கிறார் சசிக்குமார். ■

கும்பகோணம்



# "படிக்க வைக்கலாம் வாங்க!"

## – 'நமக்கு நாமே' சசிகுமார்

ஆர்.தீபன்

**திரைப்படத் தயாரிப்பாளர்கள், ஃபெப்சி ஊழியர்கள் விவகாரத்தால் கோடம்பாக்கமே கொதித்துக்கொண்டிருக்க, இதற்கிடையே சந்தடி இல்லாமல் ஒரு நல்ல திட்டத்தை விதைத்துவிட்டுத் திரும்பியிருக்கிறார் இயக்குநர் கம் நடிகர் சசிகுமார்.**

கடந்த வாரம் கும்பகோணம் அருகே உள்ள கோவிலாச்சேரி அன்னை கல்லூரியின் ஆண்டு விழாவில் கலந்துகொண்டார் சசிகுமார். அங்கே, ஏழை மாணவர்களின் கல்விக்கு மாணவர்களே உதவும் வகையில் 'மாணவர்கள் மறுமலர்ச்சித் திட்டம்' ஒன்றை அறிவித்திருக்கிறார்.

'ஒவ்வொரு கல்லூரியிலும் ஓர் உண்டியல்... அதில் மாணவர்கள் மனமுவந்து போடும் ரூபாய் நோட்டுகள்... இவற்றில் சேரும் பணத்தை வைத்து, ஏழை மாணவர்களைப் படிக்க வைப்பது...' - இதுதான் அந்தத் திட்டம்.

போன வருடம் இந்தக் கல்லூரிக்கு வந்த சசிகுமார், படிக்க பணமின்றி கஷ்டப்படும் இரண்டு மாணவர்களுக்கு

உடன் படிக்கும் மாணவர்களே உதவி செய்து வருவதை அறிந்திருக்கிறார். அப்போது தனது பேச்சினூடே கல்லூரியில் ஓர் உண்டியல் வைத்தால் நன்றாக இருக்கும் என்று ஐடியா கொடுத்திருக்கிறார். இதையடுத்து, அங்கே உண்டியல் வைக்கப்பட்டிருக்கிறது. அது சூப்பராக பலன் கொடுத்திருக்கிறது. கடந்த ஒரு வருடத்தில் ஐந்து லட்ச ரூபாய்க்கும் மேலாக பணம் திரண்டிருக்கிறது. அதை வைத்து இப்போது நாற்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இலவசமாக அங்கு படித்து வருகிறார்கள்.
இந்த சக்சஸ் ஃபார்முலாவைத்தான் இப்போது மாநிலம் தழுவிய திட்டமாக மாற்றி இருக்கிறார்.

இந்த வருடமும் இங்கு வந்த சசிகுமார், 'மாணவர்கள் மறுமலர்ச்சித் திட்ட'த்தைத் தொடங்கிவைத்து, தன் பங்குக்கு முதல் தவணையாக கணிசமான பணத்தை உண்டியலில் போட்டு அதைத் தூக்கியபடி மாணவர்கள் மத்தியில் வலம்வந்தார். ஒரே நாளில், ஒரு லட்ச ரூபாய் திரண்டிருக்கிறது.

அதன்பிறகு மாணவர்கள் மத்தியில் உரையாடியவர்,




## "ஆரோக்கியமான இந்தத் திட்டத்தை அமல்படுத்த எந்தக் கல்லூரிக்கும் போக நான் தயார் !"

"படிக்க முடியவில்லையே என்கிற ஏக்கம் யாருக்கும் வரக் கூடாது. எத்தனையோ கல்லூரிகளில் அட்மிஷன் ஃபீஸ்கூட கட்ட முடியாமல் பலர் அல்லாடுகிறார்கள்; பாதியிலேயே படிப்பை நிறுத்திவிட்டு திசையெங்கும் வேலை தேடி அலைகிறார்கள். இந்தக் கொடுமை நமது முந்தைய தலைமுறையோடு ஒழியட்டும். துள்ளித் திரியும் பால்யத்திலிருந்து எல்லோரும் படிக்க வேண்டும். அதற்காக நாமும் உதவுவோம். ராமபிரான் சேது சமுத்திர பாலம் கட்ட உதவிய அணிலைப்போல் மற்றவர்களால் எவ்வளவு முடியுமோ அதைக் கொடுங்கள். அது ஐம்பது பைசாவாக இருந்தாலும் சரிதான்!" எனப் பேச, பலத்த கைதட்டல்.

சசிகுமாரிடம் பேசினோம்...

"கடந்த வருடம் அன்னை கல்லூரி விழாவுக்குச் சென்றபோது அங்கே மாணவர்களை மாணவர்களே படிக்க வைப்பதைப் பார்த்து அதிர்ந்து, 'முதல் ஆளாக இந்த வித்தை மாநிலம் முழுவதும் விதைக்க வேண்டும். அதற்கு முதல் ஆளாக நான் நிற்பேன்' என்று பேசினேன். 'சொல்வது சுலபம் சார்... முடியுமா என்ன?' என்று கேட்டார்கள். ஆனால், அந்தக் கனவு இன்று நனவாகிக்கொண்டு இருக்கிறது. வாய்ப்பந்தல் போடுவது எனக்குத் தெரியாது. ஆரோக்கியமான இந்தத் திட்டத்தை அமல்படுத்த எந்தக் கல்லூரிக்கும் போக நான் தயார்" என்றவர், மேலும் தொடர்ந்தார்...

"இந்தத் திட்டத்தை அறிவித்த அடுத்த நாளே கோயம்புத்தூர் ஜி.ஆர்.டி. கல்லூரி நிர்வாகத்திடம் இருந்து எனக்கு போன் வந்தது. 'இனி வருடா வருடம் நீங்கள் சிபாரிசு செய்யும் தகுதியான நான்கு மாணவர்களுக்கு இலவசமாகவே சீட் வழங்குகிறோம். உங்களுடைய மாணவர் மறுமலர்ச்சித் திட்டம் குறித்தும் உடனடியாக எங்கள் மாணவர்களிடம் கலந்து பேசுகிறோம்!' என்றார்கள். ஒன்று, பத்து என பெருகும் இந்தத் திட்டம் நிச்சயம் பெரிய அளவில் வெற்றி பெறும்!" என்றார் சந்தோஷத்தோடு.

சசிகுமாரின் இந்த கன்னி முயற்சிக்கு தாராளமாக கைகுலுக்கலாம்! ■

Annai College of Arts & Science
Quality Education for Today & Tomorrow
Accredited by NAAC with "B" Grade & Recognized by UGC under Section 2(f) & 12(B)
Affiliated to Bharathidasan University,Tiruchirappalli. E-mail:acasdmn@gmail.com

| ANR STUDENT NAME LIST (2020 - 2023) | | | |
|---|---|---|---|
| S.No | Student Name | Dept | Amount |
| 1 | Abirami.R BBA 2020-2023 | BBA | 10000 |
| 2 | Anantha Kumar.A BBA 2020-2023 | BBA | 10000 |
| 3 | Swetha.K BBA 2020-2023 | BBA | 10000 |
| 4 | Sharmila.J BCA 2020-2023 | BCA | 10000 |
| 5 | Yogeshwaran.K Bcom(BM)2020-23 | B.Com (BM) | 8000 |
| 6 | Vishwa.S Bcom (BM) 2020-2023 | B.Com (BM) | 8000 |
| 7 | Sanjay.R Bcom (Reg) 2020-2023 | B.Com (Reg) | 10000 |
| 8 | Madhavan.M BHM 2020-2023 | BHM | 10000 |
| 9 | Vasikaran.P BHM 2020-2023 | BHM | 10000 |
| 10 | Gayathri Devi.G Blit 2020-2023 | Blit | 5000 |
| 11 | Vignesh.A Blit 2020-2023 | Blit | 5000 |
| 12 | Anandhakumar.D BCH 2020-23 | Chemistry | 8000 |
| 13 | Sridhar.S Bsc (Che) 2020-2023 | Chemistry | 8000 |
| 14 | Jayasri.K Bsc (CS) 2020-2023 | B.Sc., Cs | 10000 |
| 15 | Thirubharathi.K Bsc (CS) 2020-2023 | B.Sc., Cs | 10000 |
| 16 | Nalini.R Bsc(Maths)2020-2023 | Maths | 6000 |
| 17 | Roobadharshini.M Bsc (MB) 2020-2023 | Microbiology | 7000 |
| 18 | Sharmila.M Bsc (MB) 2020-2023 | Microbiology | 7000 |
| 19 | Parameshwaran.S BSC (Viscom) 2020-2023 | Viscom | 7000 |
| 20 | Mathiyarasan.R Bsc (Viscom) 2020-2023 | Viscom | 7000 |
| **GRAND TOTAL** | | | **166000** |

**ANR CO - ORDINATOR** **PRINCIPAL**

Principal
Annai College of Arts & Science
Kovilachery, Kumbakonam-612 503

ANNAI COLLEGE OF ARTS & SCIENCE KUMBAKONAM KOVILACHERY - 612 503

Scanned by CamScanner